මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: PE/2024/08** **2024.10.04**

## பாராளுமன்றத் தேர்தல் - 2024.11.14

### சனாதிபதித் தேர்தலின் போது இடைநிறுத்தப்பட்ட பணிகளுக்கு அனுமதி வழங்குதல்

கடந்த சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் அரசியல் கட்சிகள்/ வேட்பாளர்கள் ஊக்குவிக்கப்படும் விதத்தில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்த சில நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள் மற்றும் பொதுமக்களுக்கு நிவாரணமளித்தல்கள், தேர்தல் ஆணைக்குழுவினால் இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டபோதும் தற்போது சனாதிபதித் தேர்தல் கால எல்லை முடிவடைந்திருப்பதால், குறித்த நிகழ்ச்சித்திட்டங்கள்/ கருத்திட்டங்கள் மற்றும் மக்களுக்கு நிவாரணமளித்தல்கள் போன்ற பணிகளை அமுல்படுத்துவதற்கு மீண்டும் தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் அவசியமில்லை.

குறிப்பாக 2024/2025 பெரும் போகத்தில் சாகுபடி நடவடிக்கைகளுக்கு உரம் வழங்குதல், கடற்றொழிலாளர்களுக்கான நிவாரண உதவிகள், செப்டம்பர் மாதத்தில் நிலுவைத் தொகையுடன் அக்டோபர் மாதத்திற்கு கொடுப்பனவு செய்யப்படவுள்ள ஓய்வூதியத்திற்கான அதிகரித்த கொடுப்பனவு, நாட்டின் பொதுவான நிருவாகம் மற்றும் அரச சேவையை வினைத்திறனுடனும் பயனுறுதிவாய்ந்த முறையிலும் நடாத்திச்செல்வதற்கு சனாதிபதித் தேர்தல் காலப்பகுதியில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட அனைத்துப் பணிகளையும் மீண்டும் அமுல்படுத்துவது குறித்து தேர்தல் ஆணைக்குழுவிற்கு ஆட்சேபனை இல்லை.

சனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் ஆணைக்குழுவினால் இடைநிறுத்தப்பட்டிருந்த மேற்கூறிய பணிகளை சனாதிபதித் தேர்தல் முடிவடைந்தவுடன் அமுல்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையிலும் சில நபர்களும் தரப்புகளும் பொதுமக்களை தப்பாக வழிநடாத்தும் விதத்தில் கருத்துக்களையும் கூற்றுக்களையும் சமூக ஊடக தளங்களிலும் வேறு ஊடகங்கள் வாயிலாகவும் பிரச்சாரம் செய்வதை அவதானிக்க முடிகிறது. அவ்வாறான அடிப்படையற்ற கூற்றுக்கள் வெளியிடப்படுமாயின் அவற்றைப் பொருட்படுத்த வேண்டாமென்றும் தேர்தல் ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மீது நம்பிக்கைவைத்துச் செயலாற்றுமாறும் தேர்தல் ஆணைக்குழு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கின்றது.

இருப்பினும், எதிர்வரும் பொதுத் தேர்தல் காலப்பகுதியில் மேற்கொள்ளப்படும் மேற்கூறியவாறான பணிகளை அமுல்படுத்துவதற்கும், அரசாங்க மற்றும் அரச கூட்டுத்தாபனங்களுக்கும் நியதிச்சட்ட சபைகளுக்கும் சொந்தமான ஆதனங்கள் தேர்தல் காலப்பகுதியினுள் முறைகேடான விதத்தில் பயன்படுத்தப்படுவதைத் தடுப்பதற்கும், அலுவலர்களையும் ஊழியர்களையும் ஆட்சேர்ப்புச் செய்வதை/ பதவியுயர்வு வழங்குவதை/ இடமாற்றம் செய்வதை மட்டுப்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தேர்தல் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகும் என்பதும் மேலும் அறிவிக்கப்படுகிறது.

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு
தேர்தல் ஆணைக்குழு சார்பாக